# சிறுநீரகப் பராமரிப்பை மேம்படுத்துதல்:

## செயின்ட் ஹெலியர் மற்றும் செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனைகளில் சிறுநீரக சேவைகளுக்கான முன்மொழிவு

எங்கள் சிறுநீரக (ரீனல்) நோயாளிகளுக்கு சில பராமரிப்புகளை நாங்கள் வழங்குகின்ற வழிமுறை 2025 ஆம் ஆண்டிலிருந்து மாறக்கூடும்.

சிறுநீரகப் பராமரிப்பை மேம்படுத்துவதற்கு செயின்ட் ஹெலியர் மற்றும் செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனைகளைச் சேர்ந்த சிறுநீரக மருத்துவர்கள் அளித்துள்ள முன்மொழிவு குறித்த உங்கள் கருத்துகள், கேள்விகள் மற்றும் கவலைகளை நாங்கள் கேட்க விரும்புகிறோம்.

கேள்விப்பட்டியலுக்கு நீங்கள் பதிலளிக்க உதவுவதற்கு, அச்சுப் பதிப்பாக அல்லது ஆன்லைனில் கிடைக்கின்ற எங்கள் முன்மொழிவு ஈடுபாட்டு ஆவணத்தில் கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம். இது சம்பந்தமான பிற தகவல்களும் கேள்விப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## நீங்கள் இவர்களில் ஒருவரா என்று கூறவும்...

- ☐ சிறுநீரக நோயாளி
- ☐ குடும்ப உறுப்பினர் அல்லது பராமரிப்பாளர்
- ☐ பொதுமக்கள்
- ☐ செயின்ட் ஹெலியர் அல்லது செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையின் ஊயழியர்
- ☐ தன்னார்வ, சமுதாய அல்லது நம்பிக்கை அடிப்படையிலான நிறுவனத்தின் ஊழியர்
- ☐ மற்றவர்கள் (தயவுசெய்து குறிப்பிடவும்): ____________

**சிறுநீரகப் பராமரிப்பை மேம்படுத்துதல்:**
Epsom and St Helier University Hospitals NHS Trust
Frimley Clinical Commissioning Group
NHS England & Improvement - Specialised Commissioning
South West London Clinical Commissioning Group
St George’s University Hospitals NHS Foundation Trust
Surrey Heartlands Clinical Commissioning Group

# 1 முன்மொழிவு

செயின்ட் ஹெலியர் மற்றும் செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனைகளைச் சேர்ந்த சிறுநீரக (ரீனல்) மருத்துவர்கள் தங்கள் சிறுநீரக நோயாளிகளுக்கான பராமரிப்பை மேம்படுத்துவதற்கு ஒரு புதிய முன்மொழிவை சமர்ப்பித்துள்ளனர். இரண்டு மருத்துவமனைகளில் உள்நோயாளி சிறுநீரகப் பராமரிப்பை தொடர்வதற்குப் பதிலாக, **செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் £80m செலவில் கட்டப்படுகின்ற புதிய பிரிவில் ஒரே இடத்தில்** ஒன்றிணைந்து இந்த அதிக சிறப்புமிக்க பராமரிப்பைக் கொண்டுவர வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள்.

இந்த முக்கிய மாற்றங்கள் சிறுநீரக சேவைகளுடனான நோயாளியின் தொடர்பை ஐந்து சதவீதம் பாதிக்கும்.

**உள்நோயாளி (ஓரிரவு) பராமரிப்பு தேவைப்படும் சிறுநீரக நோயாளிகள்.**

- அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகள் மற்றும் கடுமையான சிறுநீரக காயம் ஆகியவற்றுக்கான சிகிச்சைகளுக்கு செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் உள்ள புதிய சிறுநீரகப் பிரிவிற்கு நீங்கள் செல்வீர்கள்.

**அதிக நிபுணத்துவம் வாய்ந்த வெளிநோயாளி ஆதரவு தேவைப்படுகின்ற சில நோயாளிகள்**

- கூடுதலான ஆதரவும் ஆலோசனையும் தேவைப்படுகின்ற நோயாளிகள், உதாரணமாக, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனைக்குச் செல்வார்கள்.
- வீட்டில் டயாலிசிஸ் செய்வதற்கான பயிற்சி போன்ற சில வெளிநோயாளி நியமனச் சந்திப்புகள் செயின்ட் ஹெலியர் மருத்துவமனைக்கு மாற்றப்படும்.

**மற்ற சிறுநீரக சேவைகளில் எந்த மாற்றங்களும் இருக்காது.**

- சிறுநீரக சேவைகளுடனான நோயாளியின் 95 சதவீத தொடர்புகள் அப்படியே இருக்கும்.
- உள்ளூர் மருத்துவமனைகள், பிரிவுகள் அல்லது வீடுகளில் தற்போது நடைபெற்று வரும் டயாலிசிஸ் சேவைகள் மற்றும் சிறுநீரக சிகிச்சையகங்களில் எந்த மாற்றங்களும் இருக்காது.

உதாரணமாக, நீங்கள் உங்கள் சிறுநீரக சிகிச்சைக்கு சமுதாயத்திற்குள் ஆதரவு பெறுபவராக இருந்தால், இது தொடரும்.

**1a) கீழே உள்ள அட்டவணையில், இந்த முன்மொழிவு பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைச் சொல்ல ஒரு பெட்டியை டிக் செய்யவும்:**

☐ இது மிகச் சிறந்த முன்மொழிவு

☐ இது சிறந்த முன்மொழிவு

☐ இந்த முன்மொழிவு சிறப்பாகவும் இல்லை மோசமாகவும் இல்லை

☐ இது மோசமான முன்மொழிவு

☐ இது மிக மோசமான முன்மொழிவு

**உங்கள் பதிலுக்கான காரணங்களைப் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் சற்று விரிவாகத் தெரிவிக்கவும்.**

அடுத்த கேள்விக்கு பதிலளிப்பதற்கு முன், ஈடுபாட்டு ஆவணத்தின் பிரிவு 2-ஐ படித்துப் பார்க்குமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம் **https://swlondonccg.nhs.uk/important-documents/**

**1b) சிறுநீரகப் பராமரிப்பை வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள இந்த முறை நோயாளிகளுக்கு எந்த அளவுக்கு தற்போது இருப்பதை விடச் சிறப்பான பராமரிப்பையும் குணமடைதலையும் அளிக்கும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?**

☐ அதிக சாத்தியமில்லை ☐ சாத்தியமில்லை ☐ உறுதியாகத் தெரியவில்லை

☐ சாத்தியமுள்ளது ☐ அதிக சாத்தியமுள்ளது

**உங்கள் பதிலுக்கான காரணங்களைப் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் சற்று விரிவாகத் தெரிவிக்கவும்.**

**1c) சிறுநீரகப் பராமரிப்பை வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள இந்த முறை தற்போது காணப்படுவதை விட சிறப்பான ஊழியர்கள் (உ.ம். மருத்துவர்கள் / செவிலியர்கள் / சுகாதார நலம்பேணல் உதவியாளர்கள்) நியமனம் செய்யப்படுவதை எந்த அளவுக்கு உறுதி செய்யும் என நினைக்கிறீர்கள்?**

☐ அதிக சாத்தியமில்லை ☐ சாத்தியமில்லை ☐ உறுதியாகத் தெரியவில்லை

☐ சாத்தியமுள்ளது ☐ அதிக சாத்தியமுள்ளது

**உங்கள் பதிலுக்கான காரணங்களைப் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் சற்று விரிவாகத் தெரிவிக்கவும்.**

**1d) இந்த முன்மொழிவுக்கு சிறப்பான மாற்று இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?**

☐ ஆம் ☐ இல்லை ☐ தெரியவில்லை

**உங்கள் பதிலுக்கான காரணங்களைப் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் சற்று விரிவாகத் தெரிவிக்கவும்.**

## 2 தற்போதைய சேவை

**நீங்கள் தற்போது பயன்படுத்துகின்ற அல்லது கடந்த காலத்தில் பயன்படுத்திய சேவைகளைப் பற்றி சிந்தித்துப் பார்த்து, எது சிறந்த பலன் அளித்திருக்கிறது எனச் சொல்லவும்.**
புதிய பிரிவை நாங்கள் வடிவமைக்கும்போது எது சிறந்த பலன் அளிக்கும் என்பதை நாங்கள் புரிந்துகொள்ள இது உதவும்.

## 3 பயணம் மற்றும் போக்குவரத்து

இந்த முன்மொழிவு டூட்டிங் பகுதியில் செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் £80m செலவில் புதிதாகக் கட்டப்பட இருக்கின்ற புதிய சிறுநீரக பிரிவுக்கானது ஆகும். அந்தப் பிரிவுக்கு வருகை புரிய வேண்டியிருந்தால், இது உங்களுக்கு அல்லது நீங்கள் கவனித்துக்கொள்பவருக்கு ஒரு நீண்ட பயணமாக இருக்கலாம். பயண நேரங்கள் பற்றிய கூடுதல் தகவல்களை ஆன்லைனில் இங்கு பார்க்கலாம் **https://swlondonccg.nhs.uk/important-documents/**.

**செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் புதிய பிரிவு கட்டப்பட்டால் உங்கள் பயணம் எந்தவகையில் பாதிக்கப்படலாம் என நீங்கள் நினைக்கிறீர்கள்? பயணம் இவ்வாறு இருக்கும் என நீங்கள் நினைக்கிறீர்களா…**

☐ மிக நீண்டதாக ☐ நீண்டதாக ☐ வித்தியாசம் எதுவும் இல்லை ☐ சிறப்பாக ☐ மிகச் சிறப்பாக

**உங்கள் பதிலுக்கான காரணங்களைப் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் சற்று விரிவாகத் தெரிவிக்கவும்.**

**உங்களுக்குப் பிரச்சனைகள் இருந்தால், அவற்றைத் தீர்ப்பதற்கு நாம் என்ன செய்ய முடியும்?**

# 4 புதிய பிரிவு - வடிவமைப்பு மற்றும் சுற்றுப்புறம்

**செயின்ட் ஜார்ஜ் மருத்துவமனையில் இந்தப் புதிய சிறுநீரகப் பிரிவை நாங்கள் கட்டுவதாக இருந்தால், உங்கள் வருகை அல்லது தங்கல் முடிந்த அளவுக்கு சௌகரியமானதாகவும் உளைச்சல் இல்லாமலும் இருப்பதற்கு பிரிவையும் சேவையையும் நாம் எவ்வாறு வடிவமைக்கலாம்?**

# 5 சேவைகளுக்கான அணுகல்

முன்மொழிவு எவ்வாறு தாமதங்களைக் குறைக்கும் மற்றும் பராமரிப்பை மேம்படுத்துவதற்கு நிபுணத்துவத்தை ஒருங்கிணைக்கும் என்பதைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள முன்மொழிவு ஆவணத்தின் பிரிவு 4-ஐப் படிக்கவும்.

**முன்மொழிவு நிபுணத்துவமிக்க சிறுநீரகப் பராமரிப்புச் சேவைகளை ஒரே கூரையின் கீழ் ஒன்றாக கொண்டுவரும். இது நோயாளி அனுபவத்தை மேம்படுத்தும் என நம்புகிறோம்.**

**4a) உங்கள் சிறுநீரகப் பராமரிப்புக்கான சிகிச்சை அல்லது ஆதரவைப் பெறுவதில் நீங்கள் (அல்லது உங்களுக்குத் தெரிந்தவர் எவரேனும்) தற்போது ஏதாவது பிரச்சனைகளை அனுபவிக்கிறீர்களா?**

☐ ஆம் ☐ இல்லை

**ஆம் எனில், உங்கள் சிறுநீரகப் பராமரிப்புக்காக உங்களுக்குத் தேவைப்படும் உதவியும் ஆதரவும் நீங்கள் பெறுவதை எளிதாக்குவதற்கு
நாங்கள் என்ன செய்ய முடியும்?**

## 6 இந்த முன்மொழிவு பற்றிய வேறு ஏதாவது விஷயம்?

**தற்போதைய நிலையை ஒப்பிடும்போது சேவையைப் பயன்படுத்தும் நோயாளிகளுக்கு சிறுநீரகப் பராமரிப்புச் சேவைகளுக்கான இந்த முன்மொழியப்பட்ட மாற்றங்கள் சிறப்பாக இருக்கும் எனக் கருதுகிறீர்களா அல்லது மோசமானதாக இருக்குமா?**

☐ மிக மோசமாக ☐ மோசமாக ☐ வித்தியாசம் எதுவும் இல்லை ☐ சிறப்பாக ☐ மிகச் சிறப்பாக

**உங்கள் பதிலுக்கான காரணங்களைப் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் சற்று விரிவாகத் தெரிவிக்கவும்.**

## 7 ஏதேனும் கூடுதல் கருத்துகள்

**நீங்கள் வசிக்கின்ற பகுதிகளில் சிறுநீரகப் பராமரிப்பு அல்லது சேவைகளை நாங்கள் எவ்வாறு மாற்ற அல்லது மேம்படுத்த முடியும் என்பதைப் பற்றி நீங்கள் வேறு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?**

வழங்கப்பட்ட ஃப்ரீபோஸ்ட் உறையில் இந்த கருத்தாய்வை திருப்பி அனுப்பவும்.

கேள்விகள் இருந்தால் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்க**SWLrenal@swlondon.nhs.uk** அல்லது இந்த எண்ணில் அழைக்கவும் **020 3574 8659**

# சமத்துவக் கண்காணிப்பு

இந்தப் படிவத்தில் பெறப்பட்ட தகவல்கள் உள்ளூர் சமுதாயத்தின் அனைத்துப் பகுதிகளிலும் நாங்கள் ஈடுபடுகிறோம் என்பதை உறுதிசெய்ய எங்களுக்கு உதவும். இந்தப் படிவத்தில் உள்ள தனிப்பட்ட தகவல்கள் இரகசியமாக வைக்கப்படும்.

**8. பெருநகரம்:** ☐ **9. அஞ்சல் குறியீட்டின் முதல் பகுதி:** ☐

**10. இனத்தன்மை** (உங்கள் இனக்குழுவை சிறப்பாக விவரிக்கின்ற பெட்டியை டிக் செய்யவும்)

**வெள்ளையர்**

- ☐ ஆங்கிலேயர்/வேல்ஷ்/ஸ்காட்டிஷ்/வடக்கு ஐரிஷ்/பிரிட்டிஷ் ஐரிஷ்
- ☐ ஜிப்ஸி அல்லது ஐரிஷ் பயணி
- ☐ வேறு ஏதேனும் வெள்ளையர் பின்னணி, தயவுசெய்து விவரிக்கவும் ☐

**கலப்பு/ பல இனக் குழுக்கள்**

- ☐ வெள்ளையர் மற்றும் கறுப்பின கரீபியன் ☐ வெள்ளையர் மற்றும் கறுப்பின ஆப்ரிக்கர்
- ☐ வெள்ளையர் மற்றும் ஆசியர்
- ☐ வேறு ஏதேனும் கலப்பு/பல இனப் பின்னணி, தயவுசெய்து விவரிக்கவும் ☐

**ஆசியர் /ஆசிய பிரிட்டிஷ்**

- ☐ இந்தியர் ☐ பாகிஸ்தானியர் ☐ வங்க தேசத்தவர்' ☐ சீனர்
- ☐ வேறு ஏதேனும் ஆசிய பின்னணி, தயவுசெய்து விவரிக்கவும் ☐

**கருப்பு/ ஆப்பிரிக்கர்கரீபியன்/ கருப்பு பிரிட்டிஷ்**

- ☐ கருப்பு பிரிட்டிஷ் ☐ ஆப்பிரிக்கர் ☐ கரீபியன்
- ☐ வேறு ஏதேனும் கருப்பு/ஆப்பிரிக்க/கரீபியன் பின்னணி, தயவுசெய்து விவரிக்கவும் ☐

**பிற இனக் குழு**

- ☐ அராபியர்
- ☐ வேறு ஏதேனும் இனக் குழுவினர், தயவுசெய்து விவரிக்கவும் ☐

**11. பாலினம்** (உங்களை சிறப்பாக விவரிக்கின்ற பெட்டியை டிக் செய்யவும்)

☐ ஆண் ☐ பெண் ☐ மற்றவர்கள்

**12. உங்கள் பாலினம் நீங்கள் பிறப்பின் போது பதிவு செய்யப்பட்ட பாலினமா?**

☐ ஆண் ☐ பெண் ☐ சொல்ல விருப்பமில்லை

**13. சமயம் அல்லது நம்பிக்கை** (பொருத்தமானதை டிக் குறியிடவும்)

- [ ] கிருஸ்துவர்
- [ ] இஸ்லாமியர்
- [ ] யூதர்
- [ ] பௌத்தர்
- [ ] இந்து
- [ ] சேக்கியர்
- [ ] ரஸ்தாஃபரியன்
- [ ] ஜைனர்
- [ ] எந்த மதமும் இல்லை
- [ ] சொல்ல விருப்பமில்லை
- [ ] மற்றவர்கள் (தயவுசெய்து குறிப்பிடவும்):

**14. பாலியல் நாட்டம்** (உங்கள் பாலியல் நாட்டத்தை சிறப்பாக விவரிக்கின்ற பெட்டியை டிக் குறியிடவும்)

- [ ] எதிர்பால் ஈர்ப்பு
- [ ] இருபால் ஈர்ப்பு
- [ ] ஆண் ஓரினச்சேர்க்கையாளர்
- [ ] பெண் ஓரினச்சேர்க்கையாளர்
- [ ] சொல்ல விருப்பமில்லை
- [ ] மற்றவர்கள் (தயவுசெய்து குறிப்பிடவும்):

**15. கர்ப்பம் மற்றும் தாய்மை** (ஒரு பெட்டியை டிக் செய்யவும்)

**நீங்கள் கர்ப்பிணியா?**

- [ ] ஆம்
- [ ] இல்லை

**கடந்த 12 மாதங்களில் உங்களுக்கு குழந்தை பிறந்திருக்கிறதா?**

- [ ] ஆம்
- [ ] இல்லை

**16. திருமண அல்லது உரிமையியல் கூட்டாண்மை / திருமணம்**(ஒரு பெட்டியை டிக் செய்யவும்)

- [ ] திருமணம் ஆகாதவர்
- [ ] திருமணமானவர்
- [ ] இணைந்து வாழ்பவர்
- [ ] ஒரே பாலினத்தைச் சேர்ந்தவருடன் உரிமையியல் கூட்டாண்மை / திருமணம்
- [ ] பிரிந்து வாழ்பவர்
- [ ] விவாகரத்து பெற்றவர்
- [ ] கணவரை / மனைவியை இழந்தவர்

**17. வயது** (ஒரு பெட்டியை டிக் செய்யவும்)

- [ ] 16-17
- [ ] 18-20
- [ ] 21-24
- [ ] 25-29
- [ ] 30-44
- [ ] 45-59
- [ ] 60-64
- [ ] 65-74
- [ ] 75-84
- [ ] 85-89
- [ ] 90 மற்றும் அதற்கு மேல்

**18. இயலாமை**

சமத்துவச் சட்டம் 2010-இன் கீழ், ஒரு நபர் தனது இயல்பான அன்றாடச் செயல்பாடுகளை மேற்கொள்வதில் பாதகமான விளைவை ஏற்படுத்தக்கூடிய கணிசமான மற்றும் நீண்ட கால உடல் அல்லது மன ரீதியான முடக்கத்தால் பாதிக்கப்பட்டிருந்தால் அந்த நபர் இயலாமையால் பாதிக்கப்பட்டவராக கருதப்படுவார். எனினும் உங்கள் குறிப்பிட்ட தேவைகளைக் கண்டறிந்து பதிலளிக்க, உங்களுக்கு என்ன வகையான இயலாமை இருக்கிறது என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது முக்கியம்.

**பின்வரும் நிலைமைகளில் ஏதாவது உங்களுக்கு குறைந்தபட்சம் 12 மாதங்கள் நீடித்திருக்கிறதா அல்லது நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறதா?**

- [ ] காது கேளாமை அல்லது பகுதியளவு செவிப்புலன் இழப்பு
- [ ] பார்வையின்மை அல்லது பகுதியளவு பார்வை இழப்பு
- [ ] கற்றல் குறைபாடு
- [ ] வளர்ச்சிக் குறைபாடு
- [ ] மனநோய்
- [ ] நீண்ட கால நோய் அல்லது நிலைமை
- [ ] உடல் ரீதியான இயலாமை
- [ ] பிற இயலாமைகள்
- [ ] பொருந்தாது

**19. நீங்கள் ஒரு பராமரிப்பாளரா?** (ஒரு நண்பருக்கு அல்லது குடும்ப உறுப்பினருக்கு)

- [ ] ஆம்
- [ ] இல்லை